நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி: 5

தொகுதி: 114

திருவள்ளுவர் ஆண்டு 2051

விலை: ரூ.20

மே- 2020

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச் சங்கம்-மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM, MADURAI

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையன்	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர் இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 9
- முதுமுனைவர் இரா. இளங்குமரன்

3. சங்கப் பாடல்களில் நடுநாளும் கோட்டிடைக் கவளமும்
- மேனாள், முதல்வர் அ. தட்சிணாமூர்த்தி 11

4. வேளாண் வாயில் வேட்பக் கூறி நச்சினார்க்கினியர் உரை
- மறுவாசிப்பு - முனைவர் ம. திருமலை 19

5. கல்லாதான் சொல் காமுறுதல் நகில் இரண்டும்
இல்லாதாள் பெண் காமுறுதலை ஒக்குமா?
- பேராசிரியர் வ. இராசரத்தினம் 28

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

புறநானூறு பெரும்பகுதி போர்ச்செய்தி குறித்தும் ஒருவன் கற்று வாழவேண்டிய நெறிமுறைகள் குறித்த மெய்ப்பொருட் செய்திகளை உள்ளடக்கியும் உள்ளதால் இந்நூலை மொழிபெயர்த்த அறிஞர்கள் "Four hundred poems of war and wisdom" என்று மொழி பெயர்த்தனர்.

மெய்யுணர்வு கிளத்தல் புலவர் கடமையாதலால் புறநானூற்றில் உலகம் போற்றும் அறிவார்ந்த செய்திகள் பேசப்படுகின்றன. குப்பைக்கோழியார் போல புறநானூற்றில் கூகைக் கோழியார் என்னும் சான்றோர் பாடல் இடம்பெறுகிறது. அப்பெரியார் போரும் பொருள் ஈட்டலுமாக வாழ்க்கையைக் கழித்தல் சிறப்பன்று; இனிய வாழ்வு கலைஞர்களைப் போற்றி அவர்களைச் சிறப்புச் செய்து மனநிறைவோடு வாழ்தல் வேண்டும்; பிறப்பு நீங்கும் காலத்து ஈதலும் துய்த்தலும் இல்லாத உலகத்தில் கூகைக் கோழி முதுமரப்பொந்தில் கதும் என இயம்ப முதுமக்கள் தாழியுள் அடங்கும் நிலைக்கு ஆளாகவேண்டியிருக்கும். அதனால் வாழ்க்கையைப் பயனுடையதாக அமைத்துக்கொள் எனும் அரிய கருத்தை எடுத்துரைத்த அப்புலவர் பெருமகனாருடைய பெயர் மறந்து போயிற்று. அதனால் பாடலைத் தொகுத்த பெருமக்கள் அவரை நினைவு கூறுவதற்கு கூகை என்று வாழா கூறாது கூகைக்கோழி என மக்களோடுபயின்று வளரும் கோழி இனத்தோடு சேர்த்து அழைத்த தகுதி அறிந்து அப்பெரியார் கூகைக்கோழியார் எனப் போற்றப்பட்டுள்ளார்.

பேராசிரியர் இளங்குமரனார் முதுபெரும் அறிஞரும் இயற்கையின் ஒவ்வொரு அசைவுகளையும் சிறுவயதுமுதல் உணர்ந்து வாழ்ந்த பெருமகனாதலால் கூகை அன்பால் போற்றி நினைதற்குரியதென்பதை உணர்ந்த பெருமக்கள் புலவரைப் போற்றி கூகைக்கோழியார் எனப்பெயர் சூட்டி மகிழ்ந்த சிறப்பை எடுத்துரைக்கின்றார். பெயரைப் போற்றுவதோடு நம்மை அண்டிப் பிழைக்கும் உயிரினங்களை நம்முன்னோர் போலப் போற்றி வாழ்தலும் வேண்டும் என்பது இப்பாடல் வழி உணர்தற்பாலது.

"சங்கப்பாடல்களில் நடுநாளும் கோட்டிடைக் கவளமும்" என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தி அவர்களின் ஆய்வுக் கட்டுரை இடம்பெறுகிறது. பேராசிரியர் தமிழ் முழுதும் அறிந்த சான்றோர். தஞ்சாவூரில் தமிழறிஞர் குழாத்துடன் விரிந்து பரந்த தமிழ்த் தேடலில் திளைத்து இன்புறும் அறிஞர். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணிநிறைவு செய்தவர்; சங்க இலக்கியங்களை ஆங்கில மொழியில் வெளியிடும் ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் பரப்பும் நன்கறிந்தவர்.

அவர்கள் புறநானூற்றில் வருகின்ற "நடுநாள்", "கோட்டிடைக்கவளம்" என்ற இரு புறநானூற்றுத் தொடர்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு இத்தொடர்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பொருள்முடிபை ஆய்வு செய்கிறார்.

நடுநாள் குறித்துப் புறநானூற்றுப் பழைய உரை ஆசிரியரும், உ.வே.சா.வும் பொருள் கூறாது விடுத்தனர். புறநானூற்றுக்குச் செம்பதிப்பாக உ.வே.சா. விட்டுச்சென்ற சில தொடர்களையும் பாக்களையும் தக்க முன்னுரையுடனும் சிறந்த திறனாய்வுக் கருத்துக்களை உள்ளடக்கிப் பாட்டின் முடிவுகளை உணர்த்தி இருப்பதால் உரையாசிரியர் ஔவை சு.துரைசாமிப்புலவர் உரையாண்டும் கற்கப்படுகிறது. அவரைப் பின்பற்றிப் பின்வந்த உரையாசிரியர்கள் மொழிபெயர்ப்பாசிரியர்கள் அனைவரும் நடுநாள் என்பதைப் பகல் என்று மொழிபெயர்த்தனர். நடுநாள் என்பது பகல் அல்ல, அது இரவையே குறிக்கும் என்பது கட்டுரை ஆசிரியர் மேற்கோள்களுடன் விளக்குகின்றார்.

"கோட்டிடைக் கவளம்" என்னும் தொடர் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டி, மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கலை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். கவளம் என்பதை Fodder என அ.கி.இராமனுசன் மொழி பெயர்த்திருப்பதைப் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. கட்டுரை ஆசிரியர் காட்டும் முடிவு சரியா தவறா என்பதை விட ஒரு செய்தியை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் போது வினா எழுப்பியும் ஐயத்தை

வெளிப்படுத்தியும் ஆய்வு செய்யும் கட்டுரை நெறி போற்றத்தக்கது. கட்டுரை ஆசிரியர் காட்டும் நூல்களின் பட்டியல், ஆசிரியர் பட்டியல் இவற்றை எண்ணும்போது அப்பேரறிஞரின் கல்விப்பரப்பு நன்கு அறிய முடியும்.

மொழிபெயர்ப்புக் குறித்து அறிஞர் அ.கி.இராமானுசனைக் குறிப்பிட்டிருப்பதால் அவரைப் பற்றிய சில செய்திகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது அவசியம் என்று தோன்றுகிறது. அத்திப்பட்டு கிருட்டிணசாமி இராமனுசன் ஆங்கிலம், தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்.

இவருடைய தந்தையார் கிருடிணசாமி சென்னை திருவல்லிக்கேணியில் கணிதப் பேராசிரியராக இருந்து பின்பு மைசூரில் உள்ள கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றினார். கணிதம் படித்த தம் மகன் இராமானுசனை அவருடைய இலக்கிய அறிவை உணர்ந்து ஆங்கில இலக்கியம் பயிலச் செய்தார்.

திருவல்லிக்கேணியிலிருந்து சுற்றத்துடன் மைசூரில் குடியேறியதால் மேல்தளம் உள்ள வீட்டில் மாடி தந்தையின் நூலகம் படிப்பறை; கீழ்ப்பகுதியில் தாயார், அத்தை முதலான உறவினர்களுடன் இருக்கை; வைணவப் பெருங்குடும்பமாகையால் திருப்பாடல் நாலாயிரத்திலும் குடும்பத்தினர் அத்துபடி; எப்பொழுதும் கல்வி சார்ந்த சிந்தனை; அதனால் ராமானுசன் தம் பதினாறாம் அகவையில் 16 நாடகங்களை இந்திய வானொலியில் ஒலிபரப்பினார். அவருடைய ஆங்கிலப் புலமையும் பிறதுறை அறிவும் கண்ட சிக்காக்கோ பல்கலைக்கழகம் இவரைத் தெற்காசியப் பண்பாட்டுத் துறையில் பணியமர்த்தியது. இவர் அக்காலத்தில் விமானப் போக்குவரத்துக் குறைந்ததும் கட்டணம் அதிகம் என்பதாலும் கப்பலில் செலவு மேற்கொண்டு பணியில் சேர்ந்தார். அங்கு பல்கலைக் கழக நூல்நிலையத்தில் உ.வே.சா. பதிப்பித்த ஐங்குறுநூறு நூலைக் கண்டவுடன் வியப்பும் மகிழ்ச்சியும் உற்ற அறிஞர் அவற்றைப்படித்து மயிற்கூச்சசடைந்ததாகக் குறிப்பிடுகிறார். அதன்பின் சங்க இலக்கியம்

இரண்டாயிரம் பாடல்களையும் படித்து அவற்றில் இருநூறு பாடல்களை ஆங்கிலத்தில் கவிதையாக வெளியிடுகின்றார். அவர் சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டமைக்கு அது உலகம் தழுவியது, மக்கள் வாழ்க்கையில் உயர்வு தாழ்வு பார்க்காமல் மாண்டம் பேசுகின்ற நூல் எனவும் வடமொழி, வருணாச்சிரமக் கோட்பாடுகளை வலியுறுத்தி ஏற்றத்தாழ்வை உறுதி செய்கின்ற பொய்யைப் புராணமாக்கி படைக்கப்பட்டிருப்பதால் தாம் வடமொழி நூல்களை மொழிபெயர்ப்பதில்லை எனவும் உறுதிப்பாடு கொண்டவர். அவர் மறைந்த பின்பும் பல்கலைக்கழக அறையில் அவர் எழுதிய எழுத்துக்கள் ஆறு பேழைகளில் அச்சிடாமல் இருந்ததாகவும் அதனை ஆக்சுபோர்டு பல்கலைக்கழக அச்சகம் தக்க அறிஞர்களைக் கொண்டு திறனாய்வு முறையில் வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்பண்பாட்டு உணர்வையும் இலக்கியத்தையும் சரியான நெறிமுறையில் ஆங்கிலத்தில் உலகத்து அறிஞர்களுக்குப் பல்வேறு கருத்தரங்குகளிலும் மேலைநாடுகளில் எடுத்துரைத்த பெருமை அப்பெருமகனாருக்குண்டு. அவருடைய தமிழ் இலக்கியப் பண்பாட்டுத் திறனாய்வு நூல்கள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு மொழியில் ஆளுமை பெற்று படைப்பிலக்கியங்களைக் கொண்டுவர வேண்டின் வழக்கும் இலக்கியமும் அறிந்திருக்க வேண்டும். இவர் மேலை நாடுகளில் பலகாலம் வாழ்ந்து மக்களோடும் மாணவர்களுடன் உடனுறைந்து வாழ்ந்ததால் ஆங்கில வழக்கும் செய்யுளும் உணர்ந்து இலக்கியம் படைத்தார்; இவரை மேலைநாட்டார் ஆங்கிலக்கவிஞராகவே போற்றுகின்றனர்.

'வேளாண் வாயில் வேட்பக் கூறி' நச்சினார்க்கினியர் உரை மறுவாசிப்பு என்னும் தலைப்பில் பேராசிரியர் ம.திருமலை கட்டுரை வரைந்துள்ளார். வள்ளல் "தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி" என்னும் தொடரை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளார். கட்டுரை இரப்பு கலைஞனின் தகுதியைக் குறைக்கின்றது என்னும்

நச்சினார்க்கினியர் உரைத்திறம் சிந்திக்கப்படுவது சிறப்பாகும். அவர்கள் உரை ஆசிரியர்கள் மட்டுமல்ல, திறனாய்வாளர்களுமாவர். கலைஞன், "பெயர்ந்து எம்தொல்பதி சேறும் என மெல்லெனக் கிளந்தனமாக" என்னும் தொடரை விளக்குகின்ற உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் "தொல்பதியென்றார், இதுவும் தமக்குப் பதி என்பது தோன்ற" என்னும் விளக்கம் அரசனையும் கலைஞரையும் வேற்றுமை இன்றி ஒன்றி உயர்ந்த ஒருமை நிலைக்கு இட்டுச் செல்கிறது. அரசன் கலைஞனின் பிரிவை விரும்பாது "வல்லே, அகறிரோ எம் ஆயம் விட்டெனச் சிரறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு" என்னும் தொடரில் அரசனின் பிரிவாற்றாமை தெரிகிறது. இரப்பு என்பதை இரப்பும் ஓர் ஏருடைத்து, இரத்தலும் ஈதலே போலும் என்னும் தொடர்களில் திருவள்ளுவர் ஒப்புரவாண்மையே கூறுகின்றார். கலைஞர்களை விரும்புவது வள்ளல் பெருமக்களின் பண்பு; கலைஞர்களின் பயணம் உலகம் தழுவியது. அவர் தம் கலைத் திறத்தால் மக்களுக்கு இன்பமும் அறிவும் கொளுத்துதல் இயல்பு, அரசன் உள்ளக்கிடக்கை பிரிவாற்றாமை; கலைஞன் உள்ளம் உலகம் தழுவியது. இரண்டுக்கும் இடையில் பொருள் உலகம் இணைப்பும் பிணைப்புமாகவும் பிரிவும் துயருமாகவும் அமைந்து இரப்பும் ஓர் ஏர் உடைத்து எனத் திறனாய்வாளனைச் சிந்திக்க வைக்கிறது. சொல் வழக்கு பொருள் சிதைவு காலப்போக்கில் மாற்றம் பெறுவதைக் கட்டுரை சிந்திக்க வைக்கிறது. கலைஞர்களின் தன் மதிப்பு உணர்வு இரவலன் என்ற சொல்லாட்சியால் பாதிக்கப்படுகிறது என்னும் கட்டுரை ஆசிரியர் கருத்து எண்ணத்தக்கது.

பேராசிரியர் வ.இராசரத்தினம், கல்லாமை என்னும் அதிகாரத்தில் கல்லாதான் சொற்காமுறுதல் என்னும் பாடல் கருத்தினை இணைத்துத் தமிழ் இலக்கியத்தில் வரும் தொடர்களை எடுத்து ஒரு கட்டுரை அமைந்துள்ளார். சொல்லுக்கு வலிமை சேர்ப்பது கல்வி; பெண்மைக்கு அழகு சேர்ப்பது மார்பகம் என ஆசிரியர் கூறும் விளக்கம் நீண்ட கட்டுரையாகவும் தமிழ் இலக்கியத்தில் பரவலாக இது குறித்த செய்தியைத் தொகுத்து வழங்கி இருப்பதும் தொகுத்து வழங்கல் என்னும் உத்தியாக அமைந்துள்ளது.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் **இரா.இளங்குமரன்**

12. கூகைக் கோழியார்

வீட்டில் கோழி உண்டு; சேவற்கோழி, பெட்டைக்கோழி என்பவை. காட்டில் கோழி உண்டு; காட்டுக்கோழி, கானாங்கோழி என்பவை. வெளிநாட்டில் இருந்து வந்த கோழிகள் உண்டு; வான்கோழி, கிண்ணிக் கோழி என்பவை. இனி, நீர்க்கோழி, தாராக் கோழி என்பனவும் உண்டு. கூகைக்கோழியும் உண்டா? எனின் உண்டு என்று காட்டுவது இது. இன்னும் இக்கோழி பிணந்தின்னிக் கோழி என்பது, 'கூகைக்கோழி வாகைப் பறந்தலை' (குறுந்.393) என்பதால் விளங்கும்.

குந்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை என்றும், 'குக்குக் குகுகுகு குக்குக் குகுகுகு' என்றும் திருப்புகழில் கூறப் பெறும்.

'கூகைக்கோழி ஆனாத் தாழிய பெருங்காடு' எனவரும் தொடரமைந்த பாட்டு புறம். 364-இல் வருகின்றது. பாடப்பட்டவர் பெயர் இல்லை. அப்பாட்டில், 'அவனைக் கூகைக்கோழியார்' என்றே உள்ளது. அவன் என்ற சுட்டுப்பெயர்க்கு முன்னர் உள்ள பாட்டில் பெயரில்லாமல் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. பாடல்

வாடா மாலை பாடினி அணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க
மைவிடை இரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்

காயம் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈய்ந்தும்

மகிழ்கம் வம்மோ மறப்போரோயே
அரிய ஆகலும் உரிய பெரும

நிலம்பக வீழ்ந்த அலங்கல் பல்வேர்
முதுமரப் பொத்தில் கதுமென இயம்பும்
கூகைக் கோழி ஆனாத்
தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே
- புறம்.364

திணை-பொதுவியல், துறை-பெருங்காஞ்சி

பொருள்:

பாடினி பொன்மாலை அணியவும், பாணன் தலையில் நீர்நிலையில் பூவாத பொற்றாமரைப் பூவை அணியவும், பெரிய ஆட்டுக் கடாவின் ஊனைத் தீயில் வாட்டிக் காயமிட்டு ஆக்கிய பெரிய உணவை மதுவுண்ணும் சிவந்த வாயில் இட்டு நாவால் அசைத்து உண்டும் தின்றும் இரவலர்க்கு ஈந்தும் மகிழ்வோம். வருக, வீரப் போராளியே! நிலத்தைக் கிழித்துச் சென்ற வேர்களையுடைய முதிய மரத்தின் பொந்துகளில் இருந்து அலறிக் கூவும் பேராந்தைகள் - கூகைகள் - நீங்காத தாழிகளை உடைய இடுகாட்டை அடையும்போது இவையெல்லாம் கிடைத்தற்கு அரியவையாம்.

அரும்பொருள்:

கேணி - நீர்நிலை; எரிமருள் - தீப்போன்ற; போத்து கடா; பக - வெடிக்க; பொத்து - பொந்து; தாழிய தாழியையுடைய; ஞான்று - பொழுது. கூகையைக் கோழிவகையாகக் கூறிய சிறப்பால், பெயர் அறிய வரா இப்பாடலைப் பாடிய சான்றோர், கூகைக் கோழியார் எனப்பட்டார். குறுந்தொகையில் **'கூகைக்கோழி'** வரினும் அதைப் பாடியவர் **பரணர்** என்று காணப்படுதல் பெயர்ச்சிக்கல் ஆங்கில்லை என்று அறிக.

சங்கப் பாடல்களில் நடுநாளும் கோட்டிடைக் கவளமும்

பேரா.அ.தட்சிணாமூர்த்தி
மேனாள் முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பெருந்தமிழாசான் பன்மொழிப்புலவர், பல்கலைச்செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் 1955-ஆம் ஆண்டில் தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திட வேண்டும் என வற்புறுத்தினார். மேலும், ஆங்கில அறிவு கொண்ட தமிழாசிரியர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டிருத்தலைச் சுட்டிக்காட்டி, உடனே அம்முயற்சியில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினார். நல்லவேளையாக, இன்று நம் சங்க இலக்கியங்கள் அனைத்தும், முழுமையாக, நம் நாட்டவராலும், பிற நாட்டவராலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், மொழிபெயர்ப்பின் தரம் குறித்த திறனாய்வுகள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. நிறைகுறைகளை அறிஞர் பெருமக்கள் எடுத்துக் காட்டினால், இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டுவதாக அமையும். இக்கட்டுரை, இந்த நோக்கில் எழுதப்பெறுகின்றது. இதில் இரண்டு புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் "நடுநாள்" என்ற கூட்டுச் சொல்லும், "கவளம்" என்ற தனிச்சொல்லும் எவ்வாறு அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது எடுத்துக்காட்டப் பெறுகின்றது.

நடுநாள்

இக்கூட்டுச்சொல் சங்கப்பாடல்களில் நாற்பத்து மூன்று இடங்களில் ஆளப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் இது நள்ளிரவு என்ற பொருளில் தான் ஆளப்பட்டுள்ளது, இச்சொல் தனித்தும், அடையுடனும் ஆளப்பட்டுள்ளது. அரையிருள், ஆரிருள், கனையிருள், மாலிருள், மயங்கிருள், பயிலிருள், அகலிருள், தூங்கிருள், வியலிருள் என்பவற்றில் இருள் அடையாக வருதலை எண்ணுக. புறம்.189-இல் 'நடுநாள் யாமத்தும்' என்ற தொடர் உள்ளது. யாமம் தான் நடுநாள் எனப்பட்டது என்பது வெளிப்படை. புறம்.280-இல், 'நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்' என்ற பகுதி இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

189-ஆம் பாட்டிற்குரிய பழைய உரையில் 'இடையாமத்தும் நண்பகலும் துயிலானாய்' என்ற விளக்கம் சிந்திக்கத்தக்கது. நடுநாள் என்பது இடையாமப்பொழுது என்று விளக்கியவர் பகலை நண்பகல் என விளக்குகின்றார். ஔவை சு.துரைசாமிப் பிள்ளையும் இதனையே தழுவியுரைத்தார். 280-ஆம் பாட்டில் உள்ள 'நடுநாளை'ப் பழைய உரையாசிரியர் (அவர் அதற்கு உரை செய்திருந்தால்) எப்படி விளக்கியிருப்பார் என நமக்குத் தெரியவில்லை. ஐயர் அவர்களும் குறிப்புரையில் யாதும் கூறிற்றிலர். ஔவை சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் 'நண்பகற் காலத்தே வந்து வண்டுகளும் மொய்த்து ஒலிக்கின்றன' என்று உரை வகுத்துள்ளார்கள். 189-ஆம் பாட்டில் இவர் வகுத்த உரையும் இவ்வுரையும் நேர்மாறாக உள்ளமை காண்க. இவ்வுரையை நிறுவுதற் பொருட்டு, 'தும்பி முதலியவற்றின் செயல் கூறியது தலைவன் சாக்காட்டினை முன்னறிவிக்கும் தீக்குறி' என்றார். இதனால், தும்பி தன் இயல்புக்கு மாறாக, அஃதாவது நள்ளிரவில் வந்து ஊதும் வழக்கத்திற்கு மாறாக, பட்டப்பகலில் (நண்பகலில்) ஒலிக்கிறது என்பது அவர் கருத்தாகிறது. பாட்டிற்கு வினை முடிவு செய்யும் ஆசிரியர், "புண்ணும் வெய்ய; தும்பியும் துவைக்கும்; விளக்கும் நில்லா; கண் துயில் வேட்கும்; குராஅல் குரல் தூற்றும்; சொல்லும் நிரம்பா. ஆதலால், துடிய, பாண, விறலி, என்னாகுவிர்கொல்; அளியீர்; நுமக்கும் அரிது; யானும் இருத்தல் அதனினும் அரிது" என்கின்றார். இங்கு, கூறப்பட்டவை உற்பாதங்கள் (தீச்சகுனங்கள்) என்பது தெளிவு. பிள்ளையவர்கள் சரியாகவே விளக்கியுள்ளார்கள். இங்கு, கூறப்பட்டவை வழக்கத்திற்கு மாறுபட்டால்தான் உற்பாதங்களாகும். இதுபற்றிச் சிறிது எண்ணிப் பார்க்கலாம். 'விளக்கும் நில்லா' என்பது, இரவுப் பொழுதைத்தான் புண்பட்ட வீரன் மனைவி சுட்டுகிறாள் என்று காட்டுகிறது. இதுவரையில் துயில் விரும்பாத கண்கள் இப்பொழுது துயில் விரும்புவதும் இரவையே நினைப்பிக்கும். ஆந்தைகள் பொதுவாக இரவில்தான் குழறும். இது பறவை நூலாரின் கருத்து. ஆனால் இவ்வீட்டில் பகலிலேயே வநது கூச்சலிடுகின்றன. செம்முதுப் பெண்டின் சொற்கள் வழக்கத்திற்கு மாறாகத் தடுமாறுகின்றன. அவ்வாறுதான் பகலில் வந்து முரலும் வண்டுகள் இரவிலே வந்து மொய்த்து ஒலியெழுப்புகின்றன. இதனைத்தான் 'நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்' என்றாள் வீரன் மனைவி.

இனி, தும்பிகள் ஊதும் வேளைபற்றிச் சங்கப்பாடல்கள் என்ன கூறுகின்றன என்று பார்ப்போம். அகநானூற்றின் 317-ஆம் பாடல் இளவேனிற்காலத்துப் பகற்பொழுதை விளக்குகின்றன. இதில்,

துவைத்தெழு தும்பித் தவிரிசை விளரி
புதைத்துவிடு நரம்பின் இம்மென இமிரும்
ஆன்ஏ முற்ற காமர் வேனில்

வேனிற்காலப் பகற்பொழுதில் (பாலைக்குரிய நண்பகல்) வண்டுகள் ஊதின என அறியலாம்.

வேங்கையம் கவட்டிடை நிவந்த இதணத்துப்
பொன்மருள் நறுந்தாது ஊதும் தும்பி
இன்னிசை ஓரா இருந்தன மாக
(அகம். 388)

பகற்பொழுதில், இளம்பெண்கள் பரணில் ஏறி நின்று குருவிகளை ஓட்டி, தும்பிகள் எழுப்பும் இசையைக் கேட்டு இருந்ததாக இச்செய்யுட்பகுதி கூறுகிறது,

பாலை வெளியில், வெயில் கடுமையாகக் காயும் வேளையில் இலவமரத்தின் தீப்போல் சிவந்த இலவமரத்தின் மலர்களைச் சுற்றி குழல்போல் ஊதும் வண்டுகள் (தும்பிகள்) பற்றி அகம். 245-ஆம் பாடல் கூறுகின்றது.

நிழல்படக் கவின்ற நீளரை இலவத்து
அழல் அகைந் தன்ன அலங்குசினை ஒண்பூக்
குழலிசைத் தும்பி ஆர்க்கும் ஆங்கண்
(அகம்.245)

என்பது காண்க. இச்சான்றுகளால், தும்பிகள் ஊதும் வேளை பகல் என்றும் இராப்போதுஅன்று என்றும் உணரலாம். எனவே, பிள்ளையவர்கள் 280-ஆம் பாட்டின் உரையில் தும்பிகள் ஊதிய வேளையை இரவு என்று கூறியது பொருந்தவில்லை என்பது உறுதியாகிறது.

இப்பிழையான உரையின் விளைவினைப் புறநானூற்று மொழிபெயர்ப்புகளில் காணமுடிகிறது.

1. The bees gather on them (the wounds) at midday; the lamps in the house die out.

   - P.Jothimuttu

2. At midday the beetles buzz in this extensive mansion

   - Madhava menon

3. Bees are swarming in the bright middle of the day

   - George L-Hart

4. Bees are buzzing in the middle of the day

   - Vaidehi Herbert

இன்னும் வெளியிடப்பெறாத அ.தட்சிணாமூர்த்தியின் மொழிபெயர்ப்பு பின் வருமாறு:-

"Serious are the wounds in the breast of my lord;

Coming at midnight, the "Tumbis hum around"

வரப்போகும் துயர நிகழ்வினை முன்னறிவிக்கும் உற்பாதங்கள் என்ற நினைவுடன் இப்பாட்டுக்கு உரையும், மொழிபெயர்ப்பும் அமையவேண்டும். ஆசிரியர்கள் இலக்கியத்தில் இடம்பெறும் பறவை, விலங்கு, பூச்சிகள், வண்டுகள் ஆகிய உயிரினங்களின் இயல்புகளையும் உள்வாங்கவில்லையானால், உரையும், மொழிபெயர்ப்பும் பிழைபடலைத் தவிர்க்க இயலாது என்பது நாம் கற்கும் பாடமாகும்.

புறநானூற்றின் 101-ஆம் பாடல் ஔவையார், அதியமானின் கொடையைப் புகழ்ந்து பாடியது. இதில் அதியமான் பரிசில் உடனே கிடைத்தாலும், சிறிது காலம் கடந்து கிடைத்தாலும், கிடைப்பது உறுதி; அது கிடைத்தலில் தவறாது என்று தன் உள்ளத்திற்குக் கூறுவதாக அமைந்த பாடல் இது. இத்தவறாமையை, அழகிய உவமை வாயிலாக வெளியிட்டார்.

அதியமான் பரிசில் பெறூஉங் காலம்

நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்

கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது பொய்யா காதே

என்பது காண்க. யானையொன்று, தானே தன் கோடுகட்கு இடையே வைத்த கவளம் அதன் வாயினுள் போவது தப்பாதவாறு போல, அதியனுடைய பரிசிலும் தப்பாது என்பது இதன் திரண்ட கருத்தாகும். இப்பாட்டுக்குரிய பழைய உரையும், பின்னர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை வகுத்த உரையும் ஒன்றே. அது வருமாறு:-

அதியமான்; பரிசில் பெறுங் காலை(காலம்) நீட்டிப்பினும் நீட்டியாதொழியினும், யானை தனது கொம்பினதிடையே வைக்கப்பட்ட கவளம் போல நமது கையகத்தது, அப்பரிசில். அது தப்பாது.

இதற்கு மேலும் விளக்கம் தருவாராய், உரையாசிரியர், "யானை வாயிற் கொண்டு நுகரும் அளவும் கோட்டிடை வைத்த கவளம் போலப் பரிசில் கையகத்தது என்க" என்றார்.

இப்பாடலை ஏழு அறிஞர்கள் மொழிபெயர்த்துள்ளனர். அம்மொழிபெயர்ப்புகள் வருமாறு:-

1. The gifts of Athiyaman whether delayed or not, like a mouthful of eatable put on its tusks by an elephant are ready hand and will never fail you.

நல்லாடை பால கிருட்டிண முதலியார்

2. Although we may get the reward sooner or later it was there for us to get like a ball of rice kept between the tusks of an elephant.

பி.சோதிமுத்து

3. No matter whether he takes more or less time to give, the presents are already there, they are in our hands as if a ball of food had been left between an elelphants tusks.

ஜியார்ஜ் ஹார்ட்

4. They (rewards) are there, whether it takes more or less time. The gifts are in our hands like a ball of food placed between the tusks of an elephant.

வைதேகி எர்பர்ட்

5. Whether the time for gifts comes right now or is put off for later, it's like fodder left in reserve on the elephants tusks.

ஏ.கே.இராமாநுசன்

6. No matter how long he takes to give us our gifts, they are there as secure as if already in our hands. It is as safe, as if it were like a ball of food kept between an elephants tusks.

மாதவ மேனன்

7. The time of receiving the gift of Athiyaman ...... may be immediate or some time later! But we may feel assured as if the gift were in our hands like the fodder placed by an elephant between its tusks. It is never an impossibility.

அ.தட்சிணாமூர்த்தி (வெளிவரவிருப்பது)

இப்பாட்டில் யானை உண்டதாகக் கூறப்படுவது, 'கவளம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. உரையாசிரியர் இருவரும் இதற்கு விளக்கம் தரவில்லை. மொழிபெயர்ப்பாளர்கள்தாம் தத்தம் தமிழறிவிற்கு ஏற்ற விளக்கத்தைத் தந்துள்ளனர். இப்பாடலை 1958-இல், முதன்முறையாக மொழிபெயர்த்த பாலகிருட்டிண முதலியார் a mouthful of eatable என்றார். இன்ன பொருள் எனச்சுட்டவில்லை. ஆனால், கவளம் என்ற சொல்லை ஒரு வாய் உணவு என்று புரிந்து கொண்டுள்ளார். ஆனால், சங்க காலத்தில் இச்சொல் இப்பொருளில் ஆளப்படவில்லை என்பது குறிக்கத்தக்கது. யாரோ ஒருவர் யானைக்கு ஒவ்வொரு கவளமாக (அவர் கொண்ட பொருளில்) அதன் கொம்புகட்கு இடையே வைக்கப்பட்டது என்ற பொருள் தோன்றும் படியாக மொழிபெயர்ப்பு உள்ளது. ஆங்கில மொழியில் சிறப்பறிவு வாய்ந்த

ஏ.கே.இராமாநுசன் fodder என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இதுதான் கவளம் என்பதற்குப் பொருத்தமானக் கலைச்சொல். ஆனால் இது, பண்ணை விலங்குகட்குரிய (யானை, குதிரை முதலியன) உணவைக் குறிப்பதாக அகரமுதலிகள் கூறும். அப்படியானால், இவ்வறிஞர், இப்பாட்டில் சுட்டப்பட்டது வளர்ப்பு யானையை என்று கருதினாரா அன்றிக் காட்டு விலங்காகக் கருதினாரா என்று புலப்படவில்லை. left in reserve என்று சொல்வதால் அது காட்டுயானை என்று கருத இடமுண்டு. எப்படியாயினும், விலங்குகளின் உணவிற்குரிய பொதுச் சொல்லாக இதனைக் கொள்ளலாம். அ.தட்சிணாமூர்த்தியும் இச்சொல்லையேப் பயன்படுத்தியுள்ளார்.

பிற அறிஞர் பலரும் அரிசியால் சமைக்கப்பட்ட சோற்றுருண்டை என்ற பொருளிலேயே மொழிபெயர்த்துள்ளனர். கவளம் என்ற சொல்லுக்கு, இப்பொருள் சங்க காலத்தில் நிலவவில்லை என்பது முன்பே கூறப்பட்டது. இவ்வறிஞர்கள், வீட்டில், அரண்மனையில், படைகளில் வைத்துப்பேணப்பட்ட யானை என்றே கருதியுள்ளனர். இங்கு நினையத்தக்கது யாதெனில், சங்க நூல்களுள் 867 இடங்களில் யானைகள் சுட்டப்படுகின்றன. அவற்றுள் 14 இடங்களில் மட்டுமே யானையின் உணவு பற்றிய குறிப்புள்ளது. அவ்வெல்லா இடங்களிலும் காட்டு விலங்குகள், வளர்ப்பு விலங்குகள் ஆகிய இரண்டுக்கும் உரிய உணவு, கவளம் என்ற சொல்லால் மட்டுமே குறிக்கப்படுகின்றது.

வேங்கை(அக.349), அதிரல்(அக.157), எருவை(குறு.70), யாஅம்(அக.59), மராமரம்(அக.335), முருங்கை(அக.167), ஓமை(அக.397) முதலானவை யானைக்குரிய கவளமாகக் கூறப்பட்டுள்ளன. கவளம் என்ற இச்சொல், வளர்ப்பு யானைக்குரிய சோற்றுத்திரளுக்கும் பொருந்தும். காய்நெல்லறுத்து என்ற புறப்பாடலில் இதனைக் காணலாம். சோற்றுருண்டை என்ற பொருளில் மொழிபெயர்த்தோர் யாவரும், வளர்ப்பு யானையை மட்டுமே கருதியது பிழையாகும். சங்க இலக்கியம் முழுவதையும் கற்றவர்கள் மட்டுமே சரியான மொழிபெயர்ப்பைத் தர முடியும் என்பது இதனால் விளங்கும். ஐயர் பதிப்பிலுள்ள பழையவுரையும், அதனை மாறாமல் பின்பற்றிய

ஔவையின் உரையும் கூறிய விளக்கங்களையும் இவ்வறிஞர்கள் சரியாக உணரவில்லை.

'யானைதன் கோட்டிடை வைத்த கவளம்' என்பதனை, யானை தன் கோட்டிடை (தானே) வைத்த கவளம் என்று கொள்ளாமல், யானைதன், (என்றன், உன்றன் என்பதுபோல்) அஃதாவது 'யானையினுடைய' கோட்டிடை என்று புரிந்து கொண்டனர். வைத்தல் என்ற செயல் யானைக்குரியது என்பதை விளங்கிக் கொள்ளாமல், மாந்தர் வைத்த என்று விளங்கிக் கொண்டதால் ஏற்பட்ட குழப்பமே இதற்கு அடிப்படை. அதுமட்டுமன்றி, உரையில் உள்ள 'வைக்கப்பட்ட' என்ற செயப்பாட்டுவினை நடையும் குழப்பமூட்டியுள்ளது. இது, இடைக்காலத்து உரையாசிரியர்தம் நடையாகும். வைக்கப்பட்ட என்பதனை வைத்த என்ற செய்வினையாகவே கருத வேண்டும். புறம்.245-இல் 'களரியம் பறந்தலை' என்பது கள்ளி வளரப்பட்ட என்றும், 239-ஆம் பாட்டில், 'பெயர்படை புறங்கண்டனன்' என்பது 'புறங்கொடுத்துப் பெயரப்பட்ட படை' என்றும், புறம். 176-இல் 'ஆமை ஈன்ற புலவு நாறு முட்டை' என்பது 'ஆமை ஈனப்பட்ட புலால் நாறும் முட்டை' என்றும், புறம். 181-இல் 'மன்ற விளவின்' என்பது 'மன்றத்தின்கண்ணே நிற்கப்பட்ட' என்றும் வருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பழந்தமிழ்ப் பாடல்களைப் பிறமொழியில் மொழிபெயர்ப்பது மட்டுமல்லாது, உரைநடைப்படுத்தும்பொழுதும் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பது நாம் உணரத்தக்கது. ஆங்கில மொழியில் எவ்வளவு புலமையுடையாரேனும், பண்டைத்தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி இல்லாதார், மிகச் சரியான மொழிபெயர்ப்பினைத் தரல் அரிது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 101-ஆம் பாடலில் 'கோட்டிடை வைத்த கவளம் போல' எனும் அழகான உவமையை, பழைய உரையாசிரியரும், பெரும்புலவரான துரைசாமிப்பிள்ளையும் விளக்கியுள்ளதனைப் பிறழவுணர்ந்தமையால் தான் பிழையான மொழிபெயர்ப்பு அமைவதாயிற்று.

'வேளாண் வாயில் வேட்பக் கூறி' நச்சினார்க்கினியர் உரை – மறுவாசிப்பு

முனைவர் ம.திருமலை
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் பிற்கால வாசகர்களுக்கு எளிதாகவும் முழுமையாகவும் அறிமுகப்படுத்திய பெருமை உரையாசிரியர்களையே சாரும். கி.மு இரண்டாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரை ஏட்டுச் சுவடிகளிலேயே வாழ்ந்து வந்த இலக்கியங்களுக்கு மாணவர்களின் நினைவாற்றலில் இடத்தைப் பெற்றுத் தந்தவர்கள் என்ற முறையில் உரையாசிரியர்களின் பணி மகத்தானது. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய உரையாசிரியரான இளம்பூரணர் முதல், உரையாசிரியர்கள் பலர் தத்தம் பங்களிப்பைச் சிறப்பாகச் செய்திருக்கின்றனர்; இத்தகையவர்களுள் நச்சினார்க்கினியர் மிக முக்கியமானவர்.

நச்சினார்க்கினியர் 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியவர்; அதிக எண்ணிக்கையில் நூல்களுக்கு உரை வரைந்தவர் என்ற பெருமைக்குரியவர்; மதிநுட்பமும் கூர்த்த பார்வையும் உடையவர்; தமது பரந்துபட்ட இலக்கிய அறிவினால் மூலநூல்களுக்குப் புதுப்புதுக் கோணங்களில் உரை விளக்கம் கூறியவர்; பிற்காலப் புலவர்களால் பெரிதும் போற்றப்பட்டவர். இவரைப் பற்றி, "தம் காலத்தை ஒட்டிய கருத்துக்களை மட்டுமல்லாமல் தாம் சார்ந்த சமய, சமூகக் கருத்துக்களையும் தம்முடைய உரைகளில் ஏற்றிச் சொல்வது இவருடைய திறன்களில் ஒன்று. மூலங்களில் அவற்றிற்குரிய தேவை இல்லாவிட்டாலும் தமது கருத்தை உட்கலப்பதில் அவர் வல்லவர்" என்று திறனாய்வாளர்கள் கூறுவதுண்டு (புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடெமி, ப.455).

பத்துப் பாட்டு முழுவதற்கும் நச்சினார்க்கினியர் உரை வரைந்திருக்கிறார். இவருடைய உரைக் கருத்துக்களைப் பெருமளவு ஏற்றும் சிற்சில இடங்களில் வேறுபட்டும் பிற்கால உரையாசிரியர்கள் உரை வரைந்திருக்கின்றனர். பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையில் 'வேளாண் வாயில் வேட்பக் கூறி' என்ற அடிக்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை விளக்கம் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

பொருநராற்றுப்படையில், பரிசில் பெற்ற பொருநன், தனக்குக் கரிகாலனின் அரண்மனையில் கிடைத்த அன்பான விருந்தோம்பல் பற்றிக் கூறும்போது 'வேளாண் வாயில் வேட்பக் கூறி' என்று கூறுகிறான். பாடலில்,

கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
(வரி.75,76)

என்று அவ்வடிகள் வருகின்றன. இவ்வடிக்கு நச்சினார்க்கினியர், "தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசாரங்களைக் கூறி..." என்று விளக்கம் கூறுகிறார். கரிகாலன், இரவலர்களை வரவேற்கும்போது கூறிய இனிய சொற்களால் உளம் மகிழ்ந்த பொருநன், கரிகாலனின் அன்பில் திளைக்க வேண்டி, தான் எப்போதும் இரப்பதற்கு விரும்பினான் என்று இதனைச் சிறிது விளக்கமாகப் புரிந்து கொள்ளலாம்.

பத்துப்பாட்டைப் பதிப்பித்த மகாமகோபாத்யாய உ.வே.சாமிநாதையர் நச்சினார்க்கினியரின் கருத்தினை ஏற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக மூன்று குறட்பாக்களை எடுத்துக்காட்டுகிறார்; அவை வருமாறு,

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று (1051)

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏர் உடைத்து (1053)

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு (1054)

இம்மூன்று குறட்பாக்களையும் மேற்கோள் காட்டி உ.வே.சா. அவர்கள் 'தகுதியுடையவர்களிடம் இரத்தல் தவறில்லை' என்ற கருத்தை வலுப்படுத்துகிறார். நல்ல மனிதர்களிடம் இரத்தல், மறைக்காமல் பொருள்களை வழங்குபவரிடம் இரத்தல் ஆகியவை ஏற்றுக் கொள்ளத்தக்கன என்ற புரிதலை ஏற்படுத்துகிறார். உ.வே.சா. மேற்கோள் காட்டுகிற குறட்பாக்கள் அனைத்தும் திருக்குறளில் 'இரவு' என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன; இவ்வதிகாரம் ஒருவரிடம் சென்று இரத்தலில் பெரும் தவறு எதுமில்லை என்று கூறுகிறது; இதுபற்றிப் பின்னர் கருதிப் பார்க்கலாம். இப்போது நச்சினார்க்கினியரின் உரையின் வன்மை மென்மைகளைப் பற்றி மட்டும் காணலாம்.

நச்சினார்க்கினியரின் உரையை அவருக்குப் பின் வந்த உரையாசிரியர்கள் பலரும் ஏற்றுக்கொண்டு உரை வரைந்திருக்கின்றனர்.

வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், "தான் உபகரித்தற்கு வழியாகிய யாசகத் தொழிலை யான் எப்பொழுதும் விரும்பும்படி உபசார மொழிகளைச் சொல்லி..." என்று உரை எழுதுகிறார் (வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், பொருநராற்றுப்படை (உரை), ப.15).

பெருமழை புலவர் பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய உரையில், "தான் வேளாண்மை செய்தற்கு வாயிலாக இரப்பினையே யான் எப்பொழுதும் விரும்புமாறு முகமன் மொழிந்து .."என்று உரைவிளக்கம் கூறுகிறார் (பொருநராற்றுப்படை (உரை), கழக வெளியீடு, 1971, ப.26).

நியூ செஞ்சுரி புத்தக நிலையம் 2004-இல் வெளியிட்ட சங்க இலக்கிய உரைத் தொகுதியில் பத்துப்பாட்டுக்கு உரை எழுதிய பேராசிரியர் இரா.மோகன், 'இனிய முகமன் உரைகள் பல கூறினான்' என்று கூறிவிடுகிறார் (இரா.மோகன், பத்துப்பாட்டு (உரை), ப.103).

கோவிலூர் மடாலயம் வெளியிட்ட மக்கள் பதிப்பில் பொருநராற்றுப் படைக்கு உரை எழுதிய பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன், 'எங்களைப் பார்த்து அரசன் தான்

விருந்தோம்பலுக்குத் தக நாங்கள் விரும்பியதைப் பேசி...' என்று உரை கூறுகிறார். இந்த உரை நச்சினார்க்கினியரின் உரையிலிருந்து சிறிது வேறுபடுகிறது; எனினும் தெளிவாக இல்லை. மேற்காட்டப்பட்ட நான்கு உரைகளுள் இரண்டு உரைகள் நச்சினார்க்கினியரைத் தழுவி அமைந்திருக்கின்றன.

பண்டைய இலக்கியங்களுக்கு இன்று உரை எழுதும்போது பழைய உரைகளின் செல்வாக்கு இயல்பாக இடம்பெற்று விடுவதுண்டு. எனவே, பழைய உரைகளை நடுநிலையுடன் மதிப்பிடுவது இன்றியமையாதத் தேவையாகும்; இதனால் பண்டைய உரையாசிரியர்களுக்கு எவ்விதமான மதிப்புக் குறைவும் ஏற்படாது; மாறாகப் பண்டைய உரைகளே நம்மைச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன என்ற உண்மை அறிவுலகத்தில் நிலைபெறும்.

'இரத்தலை யான் எப்போதும் விரும்புமாறு கரிகாலன் இனிய பேசினான்' என்ற பொருளை ஏற்பதில் சில தடைகள் இருக்கின்றன.

சங்கப் புலவர்கள் மிகுந்த தன்மதிப்பு உணர்வு (Self Esteem) உடையவர்கள். கண்டீரக் கோப்பெருநற்கிள்ளி என்னும் மன்னனை வன்பரணர் பாடிய ஒரு பாடலில்,

பீடின்மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெம் சிறுசெந் நாவே
(புறம்.148)

என்று தமது பெருமிதத்தை நிறுவுகிறார்.

மலையமான் திருமுடிக்காரிக்கு அறிவுரை கூறும் முறையில் கபிலர் பாடியுள்ள ஒரு பாடல் அவரது தன்மதிப்பு உணர்வைத் தெளிவாகக் காட்டுகிறது; அப்பாடல் வருமாறு:

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்

வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அது நற்கறிந்தனை யாயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே
(புறம்.121)

இப்பாடலும் புலவரின் பெருமித உணர்வை வெளிப்படையாகக் காட்டுவதை உணர முடிகிறது. இவற்றைப் போன்ற சான்றுகள் நூற்றுக்கணக்கில் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவற்றை மீண்டும் பட்டியலிட்டுக் காட்டுவது இங்கு நோக்கமல்ல. சங்க இலக்கியங்களில் மிக அரிதாகச் சில இடங்களில் மட்டும் புலவர்கள் தங்கள் வறுமையை வெளிப்படையாகச் சுட்டும் பாடல்கள் வருகின்றன. பொதுவாகச் சங்க இலக்கியங்களில் புலவர்கள், கலைஞர்களின் தன்மதிப்பு உணர்வு போற்றத்தக்கதாக இருப்பது கண்கூடு. இத்தகையச் சான்றுகள் நச்சினார்க்கினியரின் உரையை ஏற்றுக்கொள்ளத் தடையாக இருக்கின்றன.

பொருநன், இரத்தல் தொழிலை விரும்பினான் என்று நச்சினார்க்கினியர் கூறும் உரையை ஏற்கப் பொருநராற்றுப்படையின் அகச்சான்றுகள் தடையாக இருக்கின்றன.

1.பொருநராற்றுப்படையின் தொடக்க வரிகளில் பொருநனை அறிமுகப்படுத்தும்போது,

அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந..

என்றவாறு அறிமுகப்படுத்தப்படுகிறான்; இவ்வடிகளுக்குத் "திருவிழா முடிந்த பின்னரும் அவ்வூரில் கிடைக்கும் உணவினை விரும்பாது திருவிழா நடக்கும் வேறு புதிய ஊர்களை நோக்கிப் பயணப்படும் பொருநன்" என்பது பொருள். செயலாற்றாமல் கிடைக்கும் உணவைக் கூட விரும்பாத பொருநன் எவ்வாறு இரத்தல் தொழிலை எப்போதும் விரும்புவான் என்ற வினா எழுகிறது.

2.பொருநன் வறுமையில் இருந்தாலும் பெருமிதம் உடையவன். கரிகாலனைச் சந்தித்ததும் அவன் வழங்கிய நல்ல உடைகள், பசியைப் போக்கும் உணவுப் பொருள்கள் முதலியவற்றை நுகர்ந்து பெருமிதத்துடன் நின்றான் என்பதைப் பாடலடிகள் காட்டுகின்றன. அவை வருமாறு:

போக்கில் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆரவுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை

(வரி.86-89)

என்ற இவ்வடிகளில் பொருநனின் பெருமித உணர்வு மேலோங்கி நிற்பது தெரிகிறது. இத்தகைய தன்மதிப்பு மிக்க ஆளுமை உணர்வு உடையவன் எப்போதும் இரத்தலை விரும்புவான் என்பது ஏற்குமாறில்லை.

3.கரிகாலனின் சிறந்த விருந்தோம்பலை நுகர்ந்த போதும் பொருநன் வசதிகளை அனுபவித்துக் கொண்டு அங்கேயே தங்கி விட எண்ணவில்லை; அவன் தன் சொந்த ஊருக்குத் திரும்பவே விரும்பினான்.

சேறும், எம்தொல் பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தனமாக...

(வரி.121,122)

என்ற அடிகளில் பொருநன் ஊருக்குத் திரும்பிச் செல்வதையே விரும்பினான் என்ற செய்தி பெறப்படுகிறது. இத்தகையப் பொருநன் எவ்வாறு இரத்தலை விரும்பி அங்கேயேத் தங்க எண்ணியிருப்பான் என்ற வினா எழுகிறது.

நச்சினார்க்கினியரின் கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எடுத்துக்காட்டும் மூன்று குறட்பாக்களும் 'இரவு' என்ற அதிகாரத்தில் உள்ளவை. 'இரவு' அதிகாரத்தை அடுத்து 'இரவச்சம்' என்ற அதிகாரம் உள்ளது; அவ்வதிகாரத்தின் அனைத்துக் குறட்பாக்களிலும் ஒருவரிடம் சென்று

இரப்பதை இழிவாகக் கூறி, அதனைக் கைவிட்டு ஒழித்தல் வேண்டும் என்ற கருத்தை வள்ளுவப் பேராசான் வற்புறுத்துகிறார். 'இரவு' அதிகாரத்தில் தகுதியானவரிடம் இரத்தல் தவறில்லை என்ற கருத்தை முன் வைக்கிறார் வள்ளுவர். இவை இரண்டும் முரண்பாடாகத் தோன்றுகின்றன; எனினும் பரிமேலழகர் உள்ளிட்ட பல உரையாசிரியர்கள் ஒருவாறு அமைதி கூறுகின்றனர். அது குறித்துத் தனியே ஆராய வேண்டும்.

'இரவு' அதிகாரத்திற்கு முந்தையதாக 'நல்குரவு' என்னும் அதிகாரத்தை வைக்கிறார் வள்ளுவர்; அதற்கும் முந்தியதாக 'உழவு' அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகார வைப்புமுறையில் மிக நுட்பமான பொருளமைதி உட்கிடையாக அமைந்திருப்பதை நுண்ணிய பார்வையால் மட்டுமே அறிய முடியும். அதனைச் சற்று விளக்குவோம். ஒரு நாடு சிறப்புற்றிருக்க வேண்டுமானால் அது பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்றிருக்க வேண்டும்; எனவே 'உழவு' அதிகாரத்தைக் கூறினார். வேளாண்மை செழித்து வளராவிட்டால் நாட்டில் வறுமை நிலவும்; எனவே, 'நல்குரவு' அதிகாரத்தை அடுத்து வைத்தார். நல்குரவு ஏற்பட்டால் குடிகள் மற்றவர்களிடம் இரந்து நிற்பது தவிர்க்கவியலாதது; அதனால் 'இரவு' அதிகாரத்தை அடுத்து வைத்தார். 'இரவு' அதிகாரம் இரப்பவரைக் குறித்து அமையவில்லை; இரப்பார்க்கொன்று கொடுப்பவரைக் குறித்து அமைந்தது. ஒன்றைக் கேட்கும் முன்னரே மறைக்காமல் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் இவ்வதிகாரத்தில் கூறுவதை நன்கு உணர முடியும்; இது ஓர் அறச்செயல்பாடு (charitable activity) என்பது கருத்து. 'இரவு' அதிகாரத்தில் வரும் பின்வரும் சொற்றொடர்களைக் காண்க;

1. இரத்தக்கார்க் காணின்
2. கரப்பிலா நெஞ்சினர்
3. கரத்தல் கனவிலும் தேற்றாதார்
4. கரப்பிலார்
5. கரப்பிடும்பை இல்லார்
6. இகழ்ந்து எள்ளாது ஈவார்

இவை போன்ற பல சான்றுகள் இவ்வதிகாரத்தில் பல உள்ளன. இதிலிருந்து 'இரவு' அதிகாரம் இரத்தலை நியாயப்படுத்தும் அதிகாரமன்று; இரக்கும் நிலையில் உள்ளவர்க்குக் கொடுக்கும் அறச் செயல்பாட்டினை (charitable activity) வற்புறுத்தும் அதிகாரம். என்பதைத்தான் நான் இங்கு வற்புறுத்த விழைகிறேன். எனவே, இவ்வதிகாரம் இரவலர்க்கு உரியதன்று. மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எடுத்துக்காட்டும் மூன்று குறட்பாக்களும் சிறப்பான கருத்துக்களைப் புலப்படுத்துவன என்றாலும் நச்சினார்க்கினியரின் உரைக் கருத்தை அவை வலுப்படுத்தா என்பது திண்ணம்.

செல்வமுடையவர் அவற்றைத் தாமே முன்வந்து ஈய வேண்டும் என்ற கருத்தையே வள்ளுவரும் வற்புறுத்துகிறார். சங்க இலக்கியங்களில் புகழ்ந்து பாராட்டப்படும் வள்ளல்களும் இதனையே செய்கின்றனர். பொருநராற்றுப்படை உள்ளிட்ட பல ஆற்றுப்படை நூல்களிலும் கலைஞர்களைக் கண்டதும் அவர்கள் எதுவும் கூறாமலேயே நல்ல உடைகளையும் களைப்பு நீக்கும் உணவுப் பொருள்களையும் மன்னர்கள் வழங்கி விடுகின்றனர் என்பதைக் காண முடிகிறது. திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள அறச் செயல்களுடன் மன்னர்களின் செயல்கள் ஒத்துப்போவதை அறிய முடிகிறது. இதுகாறும் 'வேளாண் வாயில் வேட்பக்கூறி' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியரின் உரையும் உ.வே.சா. அவர்களின் மேற்கோள்களும் பொருத்தமாக இல்லை என்பது உணர்த்தப்பட்டது. இனி இப்பகுதிக்குரிய சரியான பொருள் என்னவாக இருக்கும் என்பதைக் காண முயற்சி செய்யலாம்.

'வேளாண்மை' என்ற சொல்லுக்கு ஐந்து பொருள்களைச் சாந்தி சாதனாவின் வரலாற்றுமுறைத் தமிழிலக்கியப் பேரகராதி குறிப்பிடுகிறது. இவ்வைந்து பொருள்களுள் 'உபகாரம்' என்ற பொருளும் ஒன்று. இதற்கு, "விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு" என்ற குறட்பாவின் அடியையும் அவ்வகராதி சான்று காட்டுகிறது, (வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி, ப.2347)

'வாயில்' என்ற சொல்லிற்கு வரலாற்றுமுறைத் தமிழிலக்கியப் பேரகராதி 37 பொருள்களைப் பட்டியலிடுகிறது; இவற்றுள், 'உபாயம்'

என்ற பொருளும் கூறப்படுகின்றது (சாந்தி சாதனா, மு.நூ.,ப.2209). 'உபாயம்' என்ற சொல்லிற்கு வழிமுறை, உத்தி என்ற பொருள்கள் உண்டு. எனவே, 'வேளாண் வாயில்' என்பதற்கு விருந்தோம்பலின் வழிமுறை, உத்தி என்ற பொருள்கள் உள்ளமையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இனி, 'வேட்ப' என்ற சொல்லுக்குப் பொருள் 'விரும்பி' அல்லது 'விரும்ப' என்ற பொருள்கள் உண்டு. எனவே, 'வேளாண் வாயில் வேட்பக் கூறி' என்ற அடிக்கு, 'விருந்தோம்பலின் வழிமுறைப்படி விரும்பத் தக்க சொற்களைக் கூறி' என்ற பொருளைக் கொள்வது ஏற்புடையதாக இருக்கும்.

'விரும்பத்தக்க சொல்லி' என்பதில் மேலும் தெளிவு ஏற்பட அத்தொடரை மேலும் விளக்கலாம்:

1. இரவலர்கள் விரும்பத்தக்கனவற்றைக் கூறி

2. கரிகாலன் தனக்கு விருப்பமான சொற்களைக் கூறி

என்றவாறு இரண்டு வகையாகவும் பொருள் கொள்ளலாம்.

நிறைவாக, 'வேளாண் வாயில் வேட்பக்கூறி' என்பதற்குப் பெரும்புலமைக் கடலான நச்சினார்க்கினியரின் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதை விட, நேர் பொருளான 'விருந்தோம்பலின் ஒரு கூறாக, வழிமுறையாக இரவலன் விரும்பக்கூடிய இனிய சொற்களைக் கூறி விருந்தோம்பல் செய்தான்' என்பதைக் கொள்வதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இவ்வாறு கொள்வதன் மூலம் பண்டைத் தமிழ்க் கலைஞர்களின் பெருமிதமும் தன்மதிப்புணர்வும் பேணிக் காக்கப்படுகிறது; கரிகாலனின் விருந்தோம்பலின் பெருமையும் பேணிக்கொள்ளப்படுகிறது.

கல்லாதான் சொல் காமுறுதல் நகில் இரண்டும் இல்லாதாள் பெண் காமுறுதலை ஒக்குமா?

வ. இராசரத்தினம்,
பேராசிரியர், தமிழ்த் துறை,
காந்திகிராம கிராமிய
நிகர்நிலைப் பல்கலைக் கழகம்,
காந்தி கிராமம்.
rajarathnamgri@gmail.com

மனிதனை விலங்கிலிருந்தும் மனிதரிலிருந்தும் தனித்தும் உயர்த்தியும் காட்டுவது கல்வி. அதனால்தான் வள்ளுவர் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தை வேறு எதற்கும் அளிக்கவில்லை. கல்வி, சிந்தனைக்கு வழி வகுக்கின்றது. சிந்தனை, அறிவாற்றலுக்கு அடிப்படையாகிறது. அறிவாற்றல் நாகரிக, பண்பாடு வளர்ச்சியை முன்னெடுக்கிறது. நாகரிகமும் பண்பாடும் ஒரு இனத்தின் அடையாளமாகி அதன் வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன. எனவேதான் கல்வி, கல்லாமை என்ற இரு அதிகாரங்களைப் படைத்து, கல்வியின் உயர்வை முதல் அதிகாரத்திலும் கல்லாமையின் இழிவை அடுத்த அதிகாரத்திலும் பதிவு செய்கின்றார். ‘கல்லாமை’ அதிகாரத்தில் கல்லாதான் சொல் காமுறுவதை முலையிரண்டும் இல்லாதாள் பெண்மை காமுறுவதற்கு ஒப்புமையாக்கியுள்ளார். இவ்வொப்புமைக்கான காரணங்களையும் அதன் பொருத்தத்தையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பயனில சொல்லாமை என்னும் அதிகாரத்தைப் படைத்த வள்ளுவர் சொற்தேர்வின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றார். இவ்வதிகாரத்திற்கு விளக்கம்தரும் பரிமேலழகர்,

வள்ளுவர் சொற்களை நான்காக வகைப்படுத்துகின்றார்.

பயனில சொல்,
பெரும்பயன் இல்லாத சொல்,
பண்பில் சொல்,
நயனில சொல்.

முதலில், பயன்படாத பண்பு இல் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுவானாயின் அவை அவர் மாட்டு நீதியோடு படாவாய், அவனை நற்குணங்களில் இருந்து நீக்கும் என்று கூறிய வள்ளுவர் பின்வரும் குறளில் நீதியோடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும் அவர் பயன் இலவற்றைச் சொல்லாமை பெறின் அது நன்று என்று கூறுகின்றார். 'நயனில் சொல்' 'பயனில் சொல்' என ஒரு முரணை வள்ளுவர் இங்கே வைக்கின்றார். நீதியோடு கூடிய சொற்களையே எப்பொழுதும் பேசவேண்டும்; அதுதான் இச்சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் என்று சொல்லிய வள்ளுவர் அந்த நீதியோடு படாத சொற்களைச் சான்றோர் பேசலாம் என அனுமதியையும் தருகின்றார். அதாவது நீதியோடு படாத சொற்களைப் பேசாவிட்டாலும் தீங்கில்லை; பயனிலாச் சொற்களைப் பேசுவதே பெருந் தீங்கை விளைவிக்கும் என்கிறார். எவ்வகையினும் பயன்தராதச் சொற்களைத் தவிர்த்து, தனக்கும் சமுதாயத்திற்கும் ஏற்புடைய / பயனுடையச் சொற்களையே பேச வேண்டும் என்று கூறிய வள்ளுவர் இறுதியில் கட்டளையாக,

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் (200)

என்று கூறுகின்றார். சொற்களுக்கு ஏன் வள்ளுவர் இவ்வளவு முக்கியத்துவம் தருகின்றார். அதற்கும் அவர் விடை தருகின்றார். ஆக்கமும் கேடும் அதனால் வரும்; அதாவது சொல்லால் வரும்; எனவே, சொல்லில் பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும். அதுவே அறிவுடைமையின் அடையாளம் என்பது வள்ளுவர் வாக்கு.

சொல்வன்மை என்னும் அதிகாரத்தைப் படைத்து, சொற்களைச் சொல்ல வேண்டிய முறைகளை,

சொல்லைத் திறனறிந்து சொல்லுதல்

தொழில் நிரந்து இனிது சொல்லுதல்

பிறிதொரு சொல் அச்சொல்லை வெல்லுதல்; இன்மை அறிந்து சொல்லுதல்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் சொல்லுதல்

எனக் கூறுகின்றார். சொல்லின் திறம் அறிந்து அதனைத் தேர்ந்து சொல்லப்படும் காரியங்களை நிரல்படக் கோர்த்து அச்சொல்லை வெல்லும் பிறிதொரு சொல் இன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு கேட்டாரையும் கேளாரையும் பிணிக்கும் தகையவாய்ச் சொற்களைச் சொல்லுவதே சிறப்பு என்று கூறுகின்றார்.

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த திருவள்ளுவர் கல்வி, கல்லாமை என இரண்டு அதிகாரங்களைப் படைத்துள்ளார். 'கல்லாமை' என்பதற்கு விளக்கம் தரும் புலவர் குழந்தை, 'கல்லாமை' என்றது கல்லாமையால் வரும் இழிவினை; கல்வியின் சிறப்பு முன் நேர்முகமாகக் கூறிய அளவில் முற்றுப் பெறாமையால் எதிர்மறை முகத்தால் கூறுகின்றார்" என்று விள்க்கம் தருவார். இவ்வதிகாரத்தின் இரண்டாவது குறள்,

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்

இல்லாதாள் பெண்காமுற் றற்று

(402)

இக்குறளுக்கு, "கல்வியில்லாதான் ஒருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல் இயல்பாகவே முலை இரண்டும் இல்லாதாள் ஒருத்தி பெண்மையை அவாவினாள் போலும்" என்று பரிமேலழகரும் 'கல்வியிலாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல் இரண்டு முலையும் இல்லாள் பெண்மைக்குக் காமுற்றாள் போலும்' என்று மணக்குடவரும், "கல்வி இல்லாதான் அவையில் பேசுதலை விரும்புதல் இரண்டு முலையும் இல்லாதாள் பெண்மையை விரும்புவது போலும் என்று கூறி, மேலும் முலை இல்லாதாள் பெண்மையை இளைஞர் விரும்பாதது போல கல்லாதான் சொல்லை அறிஞர் விரும்பார்.

இல்லாதாள் தன் பெண்மையை விரும்புவது போன்றது கல்லாதான் தன் சொல்லைக் காமுறுதல். அவையோர் அவன் பேச்சைச் சிறிதும் விரும்பார்" என்று கூடுதல் விளக்கமும் தருவார் புலவர் குழந்தை. 'கல்லாதவனின் சொல் கேட்க விரும்புவது, மார்பகம் இல்லாத பெண்மீது மையல் கொள்வதற்கு ஒப்பானது' என்று கலைஞரும் உரை கூறுவர்.

கல்வியில்லாதவன் ஓர் அவையின்கண் சொற்பொழிவாற்ற விரும்புதல் இயல்பாகவே முலையிரண்டுமில்லாத பேடி, பெண்மையை விரும்பினாற் போலும் என்று உரை கூறும் தேவநேயப் பாவாணர், தொல்காப்பியர்,

பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்.....
இவ்வென அறியும் அந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.
(தொல். 487)

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே
(தொல். 495)

என்றவாறு, பேடிப்பெயர் பெண்பாலீறு பெற்றது. உம்மை முற்றும்மை. இருவர் காமுறுதலும் இழிநிலைப்பட்ட தென்பதாம். இனி, கல்லாதான் சொல்லைப் பிறர் காமுறுதல் முலையிரண்டுமில்லாதாள் பெண்டன்மையைப் பிறர் காமுறுதல் போலும் என்று தொல்காப்பிய நூற்பாக்களையும் சான்று காட்டுவார்.

தேவநேயப் பாவாணர் மூன்றாம் பாலினத்தைக் குறிப்பிடுவதால் இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதாள் என்று குறிப்பிடுகின்றார். இது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்று. ஏனென்றால் மூன்றாம் பாலினம் ஆண்மை திரிந்த பெண்மை என்பதால் அத்தகையோர்க்கு மார்பகங்கள்

வளருவதற்கு வாய்ப்பில்லை. எனவே, அவர் இயல்பாகவே 'முலையிரண்டும் இல்லாதாள்' என்று கூறலாம். ஆனால் முலையிரண்டும் இல்லாப் பெண்ணைக் குறிப்பிடும் பரிமேலழகர் ஏன், 'இயல்பாகவே' என்று குறிப்பிட்டார். இயல்பாகவே மார்பகங்கள் இல்லாத பெண்கள் உண்டா? இது மேலும் ஆய்வுக்குரியது.

'பெண் காமுற்றற்று' என்ற தொடருக்கு, 'பெண்மையை அவாவினாள்' என்று பரிமேலழகரும், 'பெண்மைக்குக் காமுற்றாள் போலும்' என்று மணக்குடவரும், 'பெண்மையை விரும்புவது போலும்' என்று புலவர் குழந்தையும், 'பெண்மையை விரும்பினாற் போலும்' என்று தேவநேயப் பாவாணரும், 'பெண்மையை விரும்புவது போலாம்' எனக் கீர்த்தியும் உரை கூறுவர்.

கலைஞர் மட்டும்தான், 'பெண்' என்று குறிப்பிடுகின்றார். அதுவும் விருப்பத்தை நுகர்வோர் மீது ஏற்றி "கல்லாதான் சொல் கேட்க விரும்புவது மார்பகம் இல்லாத பெண்மீது மையல் கொள்வதற்கு ஒப்பானது" என்பார். இங்கு, பெண் என்பதும் பெண்மை என்பதும் ஒன்றா? என்ற வினா எழுகிறது. பெண் என்பதற்கும் பெண்மை என்பதற்கும் சிறு வேறுபாடு உண்டெனினும் உரையாசிரியர்கள் கூறுவதைப் போன்று பெண்ணுக்கான உயர் பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றைத்தான் வள்ளுவர் குறிப்பிட விரும்புகின்றார். எனவே, உரையாசிரியர்கள் கூறும் பெண்மை என்பதே இங்கு ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

இரண்டு விதமாக இங்கு, பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது, கல்லாதவன் சொல்லையும் முலையில்லாதவள் பெண்மையையும் காமுறுகின்றார்களா? அல்லது கல்லாதவன் சொல்லை அவையும் முலையில்லாதவளை ஆடவரும் காமுறுகின்றார்களா? இரண்டு விதமாகப் பொருள் கொள்ள வாய்ப்புள்ளது என்றாலும் கல்லாதவன் சொல்லை அவையும் முலையிரண்டும் இல்லாதாளை ஆடவரும் காமுறுதல் என்பதைக் காட்டிலும் கல்லாதான் சொல் காமுறுதலும், இல்லாதாள் பெண்மைக் காமுறுதலுமே ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில், கல்வியின் முக்கியத்துவத்தை உணராதவனும் அவையில் தன் கற்கும்

பருவத்தில் கருத்தைச் சொல்ல விரும்பும்போது சொற்கள் சிக்கித் தடுமாறும்போது அதனை அறிவான். மேலும் கல்லாதான் சொல்லை அவை வெறுக்குமேயன்றி காமுறாது. கல்லாமையின் இழிவைச் சொல்ல வந்த வள்ளுவரும் அதற்கே முக்கியத்துவம் தந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இவ்வுரைகளில் தேவநேயப் பாவாணரின் உரை மட்டும் விதி விலக்காக மாற்றுப் பொருளை முன்வைக்கிறது. முலையிரண்டும் இல்லாத பேடி, பெண் தன்மையை விரும்பினாற் போலும் என்பது அவர் கூறும் கருத்து. முலையிரண்டும் இல்லாத ஒரு பெண் இருக்க முடியுமா? என்பது அவருக்கு ஏற்பட்ட ஐயம். அளவில் முன்பின் இருக்கலாம். இல்லாமல் இருக்க வாய்ப்பில்லை என்பதால் அவர் இந்த முடிவுக்கு வரக் காரணமாக இருக்கலாம். மேலும் முலை என்பது ஓர் உறுப்பு. அது இல்லாத காரணத்தாலேயே ஒரு பெண் தன்னைப் பெண்ணாக உணராமல் போவதற்கு வாய்ப்பு உள்ளதா? என்ற ஐயமும் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். எனவே, அவர் முலை இரண்டும் அற்றவர்கள் மேலும் பெண்மையை அவாவுகின்றவர்கள் மூன்றாம் பாலினத்தவரே; எனவே, அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால், திருவள்ளுவர் முலையிரண்டும் இல்லாதாள் என்றுதான் கூறுகின்றார். அப்படியானால் பிற பெண் உறுப்புகளை எல்லாம் பெற்று முலை மட்டும் இல்லாதாள் என்பதே வள்ளுவர் கொண்ட கருத்தாக இருக்கக் கூடும். எனவே, முலை மட்டும் இல்லாத என்று கூறிய இக்குறளுக்கு, பெண்ணுக்கான எந்த உறுப்பும் இல்லாத பேடியை வள்ளுவர் குறிப்பிட்டார் என்று கொள்ளுவது ஏற்புடையதாக இருக்காது.

'உருத்தெழு வனமுலை' என்ற குறுந்தொகைப் பாடல் வரிக்கு (276) உரை கூறுமிடத்து, 'வளருகின்ற இளமுலை' என்று பொருள் கூறி வருமுலை, எழுகின்ற முலை, வரா முலை, வருமுலை, வந்த முலை என்பன பருவம் குறித்தக் குறிப்புகளாம். வருமுலையாள் என்பது, 'மங்கைப் பருவத்தினள் என்பதை அறிவதற்கு'என்று கூடுதல் விளக்கமும் தருகிறது. (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடாக வந்த குறுந்தொகை) அப்படியானால் மங்கைப் பருவத்துக்கு முந்தைய பெதும்பைப் பருவத்துப் பெண்ணை வள்ளுவர் குறிப்பிட்டிருப்பாரா? என்ற ஐயமும் எழுகிறது.

மேலும், கழகத் தமிழ் அகராதி, சுராவின் தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி, மதுரைப் பேரகராதி, லிப்கோ தமிழ் - தமிழ் - ஆங்கிலப் பேரகராதி ஆகியவை பெண் என்ற சொல்லுக்குச் சிறுமி என்றொரு பொருளைத் தருவதும் அதனை உறுதிப்படுத்துகிறது.

'கல்லாதான் சொல் காமுறுதல்' என்று வள்ளுவர் கூறுவது கல்வி கற்க வாய்ப்பிருக்கும் ஒருவனைப் பற்றியதாகத் தோன்றவில்லை. கற்கும் வாய்ப்பை இழந்த அல்லது கல்லாமல் காலங்கடத்திய ஒருவனைப் பற்றிக் கூறவே வள்ளுவர் எண்ணுகின்றார் எனத் தோன்றுகின்றது. மேலும், 'வராமுலைப் பருவத்து, சிறுமி பெண் தன்மையை விரும்பினாள்' என்பதும் பொருத்தப் பாடுடையதாக இல்லை.

கல்லாதான் சொல்லைக் காமுறுவதற்கும் முலையில்லாதாள் பெண்மையை விரும்புவதற்கும் என்ன தொடர்பு? இந்த ஒப்புமையை வள்ளுவர் காட்ட காரணம் என்ன? என்ற வினாக்கள் எழுகின்றன.

கல்லாதான் சொல் காமுறுவதை, முலை இல்லாதாள் பெண்மை காமுறுவதற்கு வள்ளுவர் உவமை கூறியதற்கு வேறு தனித்தக் காரணம் இருக்க வேண்டும்.

முலையின் தோற்றத்தைக் குறிப்பிடுவதில் சங்க ஆண்பாற் புலவர்களும் பெண்பாற் புலவர்களும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். 'உருத்தெழு வனமுலை' எனக் கோழிக் கொற்றனாரும் (குறுந். 276:3) 'கோங்கின் குவிமுகை இளமுலை' என்று நக்கீரரும் (முருகு.35) 'ஈர்க்கு இடை போகா ஏர்இள வனமுலை' (பொரு.36) 'கோங்கின் அவிழ்முகை எள்ளி' (சிறு.25) என்றும் 'வருமுலை அன்ன வண்முகை' (சிறு.73) என நல்லூர் நத்தத்தனாரும் 'எதிர்த்த தித்தி முற்றா முலையள்' என்று காக்கை பாடினி நச்செள்ளையாரும் பாடியுள்ளனர். எனவே, இளமுலை, முற்றா முலை காண்போருக்கு இன்பம் பயப்பதாக அமைகிறது. மேலும் "தித்தியைக் காமஞ்சான்ற உடல் வெளிப்படுத்தும் இளமையின் அடையாளமாகக் கொண்டால் எதிர்த்த தித்தி என்பதை மாநிற உடலில் பளிச்சிட்டுத் தோன்றிய நிறப் புள்ளிகள் எனக் கொள்ளலாம். அவ்வகையில் இந்த ஆட்சி சிறப்பான ஆளுகையாகின்றது. 'எதிர்த்த தித்தி முற்றா முலையள்'

என்பது காக்கை பாடினியாருக்கு மட்டுமே உரிய ஆட்சி. இதன்மூலம், இப்படியான அடையாளத்திற்கு உரியவள் காமச் செவ்வியள் என்னும் பொருளை அவர் தந்திருக்கிறாரா? என்பது ஆராயற்பாலது" (யாணர் ப.69) என்னும் சுதர்சனின் கூற்றும் இங்கு எண்ணத்தக்கது.

மூதின்முல்லைப் பாடல்களில் இதன் பயன்பாடு மாற்று வடிவம் கொள்கிறது.

நரம்புஎழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினான் என்று பலர் கூற
மண்டு அமர்க்கு உடைந்ததன் ஆயின் உண்ட என்
முலைஅறுத் திடுவென் யான் எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே (புறம்.278)

இங்கு, புறமுதுகிடுவதற்கும் முலையை அறுத்திடுவதற்கும் என்ன தொடர்பு? மகன் புறமுதுகிட்டதற்காக அவள் ஏன் தன் முலையை அறுத்திட வேண்டும்? என்ற வினாக்கள் எழுகின்றன. ஈண்டு முலை என்பது ஆற்றலின் அடையாளமாகப் பார்க்கப்பட்டுள்ளது. பாலூட்டுதலில் உணவூட்டல் / உயிரூட்டலுக்கு அப்பால் உரமூட்டலும், ஆற்றல் ஊட்டலும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆற்றலை இழந்து உயிரைத் தக்க வைத்துக் கொள்ள அனுமதிக்கான மறப் பண்பு இங்கு முதன்மை பெறுகிறது. எனவேதான், 'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என் முலை அறுத்திடுவன் யான்' என வஞ்சினம் கூறி செருகளம் புகுந்தாள். காக்கை பாடினி நச்செள்ளையாரின் இப்பாடல் முலையை ஆற்றலின் இருப்பிடமாகப் பதிவு செய்கிறது.

காம உணர்வு முகிழ்வது முலையில் தான் என்ற கருத்தும் நிலவுகிறது.

முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை,
அசைவுடை நெஞ்சத்து உயவுத் திரள் நீடி,
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக் காதல் அவிர்தளி பரப்பிப்
புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்,
நிலவரை எல்லாம் நிழற்றி,
அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே.
(அகம்.273)

முலையிடை முளைவிட்ட நோய் நெஞ்சில் வேர்விட்டு அசைவுடை நெஞ்சத்து உயவுத் திறன் நீடி குறையாக் காதல் தளிர் பரப்பி, நாரால் ஆகிய தண்டோ கிளையோ இல்லாத புலவரும் புகழும் பெரு மரமாகி நிலப்பகுதி முழுவதையும் கவிந்து மறைத்து அலரையும் அரும்பையும் சிந்தித் தளிர் விட்டது. ஆனால், இந்நோக்கிற்கு மாற்று மருந்தானவர் வரவில்லை என்று கூறியுள்ளார். இங்கு, காமவுணர்வின் முகிழிடமாக முலை முன்னிறுத்தப்படுகிறது.

ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமாவுண்ணி

(நற்.216:8,9)

குருகுகள் ஆரவாரிக்கும் வயலில் பரணின்கண் உள்ள ஒருவன், வருத்துதலால் ஒரு மார்பகத்தை அறுத்துக் கொண்ட திரு மாவுண்ணியின் கதை போன்று நம்மைக் கைவிட்டாரானாலும் நாம் விரும்பும் அவரையன்றிப் பிறர் யாவராயினும் நமக்கு வேண்டாதாரே.

இப்பாடல் வரிகளும் காமம் காரணமாக முலை அறுத்தமையைச் சுட்டுகிறது. கணவன் இல்லாத நிலையில் காமம் முகிழ்வதை விரும்பாத கண்ணகி அதைத் தடுக்கும் முகமாக அதற்குக் காரணமான முலையைத் திருகி எறிகின்றாள்.

கோவிந்தன் மீது ஆறாக்காதல் கொண்ட ஆண்டாள் கோவிந்தனின் காமம் கிடைக்கா விட்டால் என் கொங்கைகளைக் கிழங்கோடும் பிடுங்கி எறிவேன் என்கிறாள். இதனை,

உள்ளே உருகி நைவேனை உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனைக் கண்டக்கால்,
கொள்ளும் பயன் ஒன்று இல்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன்மார்பில் எறிந்து என் அழலைத் தீர்வேனே.

(நாச்சியார் திருமொழி, 634:8)

"உள்ளுக்குள்ளேயே உருகி வருந்துகிறவளைப் பற்றி, 'இருக்கிறாளா? செத்தாளா?' என்று கூடக் கேளாதவனாய், என்னை முழுதும் கொள்ளை கொண்டவனாய், பெண்களிடத்திலே பொல்லாங்கு செய்யும் கண்ணனை நான் காணப் பெற்றேனாகில், அவனை அணைக்காமல் நுகராமல் உள்ள என் முலைகளை வேரோடு பிடுங்கி, அந்தக் கண்ணனுடைய மார்பிலே எறிந்துவிட்டு, என் படுதுயரைப் போக்கிக்கொள்வேன்." (எஸ்.ஜெகத்ரட்சகன், நாலாயிர திவ்யப் பிரபந்தம், ப.277) என்கிறார்.

எனவே, மேற்கண்டவற்றை நோக்க, காமம் முகிழ்க்குமிடம் முலை என்பது புலனாகிறது. மேலும், இவை, பெண்கள் கூற்றாக அமைந்திருப்பதும் கூடுதல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன எனலாம்.

முலையைத் தாய்மையின் அடையாளமாகவும் சங்கப் பனுவல்கள் பதிவு செய்துள்ளன.

வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
இடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே

(ஔவையார், புறம் 295: 4-8)

இப்பாடலுக்கு, "போர்க்களத்தின் நடுவில்,...... எதிர்த்து வரும் பகைவர் படையைப் பிளந்து, தான் போர் செய்வதற்கு இடமுண்டாகுமாறு குறுக்கிட்டுத் தடுத்த வீரன் ஒருவன் படைகளின் நடுவில் வெட்டப்பட்டு வேறுவேறு துண்டுகளாகக் கிடந்தான். புறமுதுகு காட்டி ஓடாத கொள்கைகளையுடைய அவ்வீரனின் தாய்க்குத் தன் மகன் வீரமரணம் அடைந்ததைக் கண்டதால், அன்பு மிகுந்தது. அவளுடைய வற்றிய முலைகள் மீண்டும் பாலூறிச் சுரந்தன" என்று இர.பிரபாகரன் உரை கூறுகின்றார்.

"பெருமித நிலையில், 'வாடுமுலை யூறிச் சுரந்தன' எனும் ஔவையின் பெண் மொழியை வெறும் உயர்வு நவிற்சியாகக் கருதி ஒதுக்கிவிடுவதற்கில்லை. அதன் உணர்நிலை உளவியல், உடலியல் நோக்கில் ஆராயத்தக்கது. மகாபாரதத்தில் முதியோளாகிவிட்ட குந்தியும் நடுத்தர வயதை எட்டிவிட்ட கர்ணனும் சந்திக்கும்போது, தாய்-மகன் அடையாளம் காண்பதற்குச் சமூக ஏற்புத் தடையமாக அமைவது குந்தியின் முலைப்பால் பீறிட்டுச் சுரத்தலாகும் - அந்தப் பாலைக் கர்ணன் பருகினால் வெல்ல முடியாத முழுவீரனாக மாறி விடுவான் என்பதற்காகக் கண்ணன் பூனையாக மாறித் தடுப்பதாக — ஒரு செய்தி வழிவழியாக இன்றளவும் தெருக்கூத்திலும் இடம் பெற்று வருகின்றது. வயதான தாயின் முலை சுரத்தல் - முலைப் பாலுக்கும் முழு வீரத்திற்கும் முடிச்சுப் போடுதல் ஆகியன தொன்ம நிலைப்பட்டனவாக அமைதல் எண்ணிப் பார்க்கத்தக்கது" (இரா.சம்பத், பக்தவச்சலபாரதி(பதி.), யாணர் ப.66)

திருவடி தொழுது வீழ்ந்த சிறுவனைக் கண்ட போழ்தே
வருபனி சுமந்த வாட்கண் வனமுலை பொழிந்த தீம்பால்
முருகுடை மார்பில் பாய்ந்து முழு மெய்யும் நனைப்ப
(சீவக சிந்தாமணி, 1911)

இப்பாடலுக்கு, "முதுமை நிலையிலுள்ள விசயமாதேவிக்கு, சீவகனைக் கண்டவுடன் தாய்மை மீதூற அழகிய மார்பில் சுரந்த பாலும் வணங்கி எழுந்த சீவகனுடைய அழகிய மார்பில் பாய்ந்து உடலெல்லாம் நனைக்க" என்று உரை தருவர். எனவே, தாய்மையின் அடையாளமான முலைப்பால் முதுமையிலும் சுரக்கும் என்பதே அனைவரின் கருத்தாகவும் உள்ளது.

எனவே, முலை, அழகின் வடிவமாக, ஆற்றலின் சின்னமாக, காமத்தின் கொள்கலனாக, தாய்மையின் அடையாளமாக மொத்தத்தில் பெண்மையின் அனைத்துப் பண்புகளையும் ஒருங்கேபெற்ற ஒன்றாகத் திகழ்ந்த காரணத்தாலேயே வள்ளுவர், 'முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' என்று கூறுகின்றார்.

'கல்லாதான் சொல் காமுறுதல்' என்ற தொடருக்கு உரையாசிரியர்கள் எவரும் சொல்லாத ஒரு நுட்பமான பொருள் உண்டு. கல்லாதவனுக்கு அறவே சொற்கள் தெரியாது எனப் பொருள் கொளின் அது பிழையாகும். அவனுக்குச் சொற்கள் தெரியும்; ஆனால், அவையில் அல்லது சான்றோர் முன்னிலையில் நுட்பமும் திட்பமும் உடைய தேர்ந்த சொற்கள் அவனுக்கு வசப்படாது என்று கொள்வதே ஏற்புடையதாகும். அதேபோல முலையிரண்டும் இல்லாதாள் என்றால் முற்றிலுமாக இல்லை எனப் பொருளாகாது; அதற்கான வடிவமும் வனப்பும் இல்லாததையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனக் கொள்ளுதலே ஏற்புடையதாகும்.

இந்தக் குறளில் வள்ளுவர் ஆண்களுக்கான வெளியையும் பெண்களுக்கான வெளியையும் வரையறை செய்கின்றார். ஆண்கள் கல்வி கற்றுச் சமூக வெளியில் இயங்கத் தக்கவர்கள் என்பதையும் பெண்கள், பெண்மை குணங்களோடு குடும்பத்திற்குள் இயங்க வேண்டியவர்கள் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். 'தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' (69) என்ற பதிவும் இதனை மேலும் உறுதிபடுத்தும்.

முடிவாக

முலை, அழகின் உறைவிடம்; காமத்தின் முகிழ்விடம்; ஆற்றலின் பிறப்பிடம்; தாய்மையின் இருப்பிடம் எனத் திகழ்ந்து பெண்மையின் மொத்தப் பண்புகளையும் ஒருங்கே பெற்ற உறுப்பு என்பதாலும் இதனை உவமைப்படுத்தினார். ஆணின் ஒட்டு மொத்த ஆளுமைக்கு அடையாளமாகச் சொல்லும், பெண்மையில் ஒட்டு மொத்த ஆளுமைக்கு அடையாளமாக முலையும் திகழ்வதால் கல்லாதான் சொல் காமுறுவதை முலை இல்லாதாள் பெண்மையைக் காமுறுவதற்கு உவமைப்படுத்தியுள்ளார் எனல் தகும்.

சிங்கம்பட்டி அரசர் நினைவு அஞ்சலி

தென்பாண்டி நாட்டில் புண்ணிய நதியாகப் போற்றப்படும் தாமிரபரணி என்னும் பொருனையாறு சிங்கம்பட்டியின் கொடை. தமிழகத்தில் பல ஆறுகள் வறண்ட மண் திட்டுகளாக அழிந்து வரும் காலத்தில் பொருனையாறு வற்றாத நீரூற்றாக வளம் கொழித்துக் கோடையிலும் நீர் ஊற்று இருப்பதால் தென்பாண்டித் திருநெல்வேலி சீமையார் மிகுபெருமிதம் கொள்வர். தாமிரபரணியைப் போற்றி வழிபடுவர். பொருனையாறு உயிர்ப்போடு நீர் வற்றாது வளம் கொழிப்பதற்கு மலைப்பகுதியில் மாஞ்சோலை சார்ந்த மலைப் பகுதி பாதுகாக்கப்பட்ட நிலமாக இன்றளவும் பாதுகாக்கப்படுகிறது. இயற்கையை அழிக்கும் வன்முறையாளர்களின் திருட்டுத் தாக்குதலுக்கு மலையும் காடும் தப்பி தன் நிலைகுலையாமல் நிற்கிறது.

இம்மாஞ்சோலைப்பகுதி ஒரு காலத்தில் சிங்கம்பட்டி அரச குடும்பத்தின் பராமரிப்பில் இருந்தது. ஆங்கிலச் சுரண்டல் கும்பல் இந்திய நாட்டை வேட்டைக் காடாக்கியதற்கு மாஞ்சோலையும் தப்பவில்லை. ஆங்கிலேயர் சூழ்ச்சியால் மாஞ்சோலை ஆங்கிலேயர் ஏகபோகமாகியது.

இத்தகைய வளமிக்க மலைப்பகுதியில் பழைய நாட்களில் ஆடுமாடு மேய்த்துப் பிழைக்கும் உரிமை இருந்தது. அவர்களில் இரு பெண்மக்கள் மாடுகளைப் பராமரித்து வந்தனர். ஆநிரை கவரும் கள்வர் கூட்டம் அவர்களை விரட்டியடிக்க முயன்ற போது அப்பெண்களுக்கு உற்ற அன்பனாக சொரிமுத்து அய்யன் வில் ஏந்திப் போர் புரிந்து கொள்ளையர்களை விரட்டி ஆநிரைகளைக்

காத்துவரும் நாளில் ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் அன்பொடு புணர்ந்த ஐந்திணை வழாது ஐயன் இருபெண்களையும் கந்தருவ மணம் செய்து கொண்டு இல்லறம் இனிது நடைபெறும் நாளில் கொள்ளையர்களுடன் நிகழ்ந்த போரில் சொரிமுத்து ஐயன் வீரமரணம் அடைந்தான். பெண்கள் இருவரும் சிங்கம்பட்டி அரசரைக் கண்டு முறையிட்டனர். அரசர் அப்பெண்களுக்கு அடைக்கலம் அளிக்க முன்வந்தும் அப்பெண்கள் புறநானூற்று வீரமகளிர் போல தீக்குளித்து உயிர்துறந்தனர். மூவரும் நடுகல்லாயினர். தென்பாண்டி நாட்டில் சொரிமுத்து ஐயனுக்கும் மகளிருக்கும் கோயில் எடுத்து விழா எடுத்தனர். மக்கள் முடிவை ஏற்று அரசர் விழாவில் நடுநாயகமாக நின்று விழாவைச் சிறப்பிக்க வேண்டும். தலைமக்கள் இல்லாத நிகழ்வும் ஊரும் நாடும் சிறப்புறுவதில்லை. அதனால் சிங்கம்பட்டி அரசருக்குரிய ஆடை அணிகலன்களுடன் குதிரை ஏறி திருவிழா நிகழ்ச்சியில் பவனிவருவார். எளிய காட்டுவாசிகளின் நடுகல்லும் கோயிலாகி அரசர் நடத்தும் திருவிழா மரியாதை சிங்கம்பட்டி அரசகுடும்பத்திற்குரியது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க சிங்கம்பட்டி அரசர் முருகதாசன் தீர்த்தபதி அரசர்பால்தர வந்த பழவிறல் தாயமாக சிங்கம்பட்டியில் சிறப்புற வாழ்ந்த நாட்களிலும் எளிவந்த தன்மையோடு கற்றாரும் மற்றாரும் விரும்பும் இன்சொல், எளிமைப் பண்புகளுடன் விளங்கியது நினைவு கூரத்தக்கது. தாம் ஒரு அரசர் என்றே காட்டிக் கொள்ளமாட்டார். பெரும் கல்வியாளர். ஆங்கிலம் தமிழ் இலக்கியப் புலமை மிக்கவராயினும் மிக்க அடக்கத்துடன் நடந்து கொள்வது பார்ப்பவர்களை வியப்படையச் செய்யும். இவர் மகாராஜா சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி அவர்களின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய எளிவந்த தன்மையைச் சான்றோர் அறிவர். தொண்டை மண்டலத்தில் சிறப்புடைய சென்னை மாநகரில் புகழ் மிக்க அறிஞர்கள், கல்வியாளர்கள், வணிகப் பெருமக்கள் ஒன்றுகூடி இப்பெரியாருக்கு ஒருவிழா எடுத்து அவர் அரசர் தோற்றத்தில் காட்சிதர வேண்டுமென ஒரு மேடை ஏற்பாடு செய்து விழா எடுத்துச் சிறப்பித்தனர். அவரைத் தேடி சிறப்புக்கள் வந்தன. அவர் எதனையும் வேண்டாதவராக வேண்டாமை என்னும் விழுச்செல்வம் உடையவராக 88ஆம் அகவையில் நில்லாதவற்றை நிலை எனக்கொள்ளும் உலகில் நிலைபேறு பெற்றார். இறப்பினும் இறவா அன்பு நினைத்தற்பாலது. நீள நினைத்தற்குரிய பண்பாளர்; அவர் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்திற்கு மதுரை வரும்போது வருகைபுரிவார்; அச்சமயங்களில் அப்பெரியாருடன் பழகும் வாய்ப்பும் அவர் அன்பைப் பெறும் வாய்ப்பும் கிடைத்தது புண்ணியப் பேறேயாகும். திருவுடை மன்னனைக்காணின் திருமாலைக் கண்டதாகும். இவர் அருளும் திருவும் உடைய மன்னர் என்பதால் இருபேறும் பெற்ற உவகை தரும். உடலுக்கு அழிவுண்டு; அன்புக்கு அழிவு இல்லை. தீர்த்தபதி மறைந்தாலும் அவர் அன்பு மறைவதில்லை. வாழ்க அப்பெரியார் அன்புள்ளம்.

உலகம் அன்பில் இன்புறுகிறது
உலகம் அன்பால் இயங்குகிறது;
உலகம் உய்ய அன்பைப் பயின்றீர்;
உலகம் அன்பைப் பயில உங்கள்
அன்பு உயிர்ப்புடன் இயங்க
செந்தமிழ் தங்களைப் பணிந்து வணங்குகிறது.

ஜூன் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வெள்ளைவாரணர்
(ஜூன்.13)

அண்ணாமலைச் செட்டியார்
(ஜூன்.15)

கவிஞர் சுரதா
(ஜூன்.19)

ச.மெய்யப்பனார்
(ஜூன்.28)

(கோ)விந்தன்
(ஜூன்.30)

புதுமைப்பித்தன்
(ஜூன்.30)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உல.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1